**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| THE COURT OF | : | II ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THANJAVUR. |
| Case No | : | SC 73/2020 |
| Prosecution Witness | : | PW 7 |

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : பெரியார்செல்வன் | Caste | : | |
| Father's Name | : குணசேகரன் | Calling | : | |
| Village | : | Religion | : | |
| Taluk | : | Age | : | 30 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 20.06.2023.**

***எதிரிகள் 1, 2, 4 , 9 , 10 , 11 வருகை . எதிரிகள் 3, 5, 6, 7, 8 வருகை இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை :–**

நான் பனவெளிகிராமத்தில் குடியிருக்கிறேன். வழக்கறிஞராக தொழில்செய்கிறேன். வழக்கில் இறந்துபோனவரை தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. எங்கள் ஊர் ஆற்றில் ஆண் பிரேதம் கிடந்ததாக சொன்னார்கள் நானும் பார்க்க போயிருந்தேன் அப்போது போலிசார் சம்பவ இடத்தில் பார்வையிட்டு பிரேதத்தை வேன் வைத்து எடுத்து சென்றார்கள். போலிசார் என்னிடம் கையெழுத்து எதுவும் வாங்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரிலும் மகசரிலும் இருப்பது என்னுடைய கையொப்பம் அல்ல.

**அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

என்னை போலிசார் விசாரித்தபோது போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு என் முன்னிலையில் பார்வை மகசர் தயாரித்தார் என்றும் அதில் நான் சாட்சி கையொப்பம் இட்டேன் என்றும் போலிசார் அங்கு என் முன்னிலையில் இரத்தம் படிந்த மண், இரத்தம் படியாத மண் சிறிதளவு ஆகியவற்றை 12.06.2019 ம் தேதி அன்று 13.30 மணியளவில் மகசர் தயாரித்து கைப்பற்றினார்கள் என்றும் அதில் நான் சாட்சி கையொப்பம் போட்டேன் என்று எதிரிகளுக்கு பயந்து கொண்டு பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 6, 8 முதல் 11 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

அன்று கூட்டம் 300 பேர் இருப்பார்கள். பிரேதத்தின் அருகே போலிசார் விடவில்லை. ஒரு 500 அடி துாரத்தில் கரையில் இருந்துதான் பார்த்தார்கள். பிரேதம் இருந்த இடத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது.

**7 வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-A. மலர்விழி)

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

| | | |
|---|---|---|
| THE COURT OF | : | II ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THANJAVUR. |
| Case No | : | SC 73/2020 |
| Prosecution Witness | : | PW 8 |

| | | | |
|---|---|---|---|
| Name | : மலர்கொடி | Caste | : |
| Father's Name | : வீரமணி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : 51 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 20.06.2023.**

***<u>எதிரிகள் 1, 2, 4 , 9 , 10 , 11 வருகை . எதிரிகள் 3, 5, 6, 7, 8 வருகை இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.</u>***

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u> :–**

நான் மணலூர் சாஸ்திரிநகரில் குடியிருக்கிறேன். நான் கூலிவேலை பார்க்கின்றேன். எனக்கு பிராபகரன், பிரசாந்த் என்ற 2 பையன்கள், பிரேமா, பிருந்தா என்ற இரு மகள்களும் உள்ளனர். எனது மூத்த மகள் பிரேமாவை திருமழப்பாடியில் திருமணம் செய்து கொடுத்திருக்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பிரசாந்த் என்னுடைய மகன். என்னுடைய மகன்முருகராஜின் மகள் சந்தியா என்ற பெண்ணை லவ் பண்ணினான். 8ம் தேதி 3 1/2 வருடங்களுக்கு முன்பு சந்தியா என்னுடைய வீட்டிற்கு வந்தார். நான் ஏன் பாப்பா வந்த, உன்னை கொண்டு போய் விட்டுவிடுகிறேன் என்று சொன்னேன். அதற்கு சந்தியா நான் போனால் என் அப்பாவும் சித்தப்பாவும் அடித்தே கொன்றுவிடுவார்கள். நான் பிரசாந்துடன் தான் வாழ்வேன் என்று சொல்லிவிட்டார். 10ம் தேதி திருப்பூர் செல்வதற்காக சந்தியாவும் பிரசாந்தும் வெளியே கிளம்பி விட்டார்கள். நானும் என் மகனும், மகளும் கரும்பங்கொல்லையில் முருகராஜ் ஏதேனும் செய்துவிடுவாரோ என்று பயந்து பதுங்கிகொண்டோம். கும்பகோணம் யாங்கியான்பேட்டை என்ற இடத்தில் உள்ள என் அக்கா வீட்டிற்கு பிரசாந்த் சந்தியா, நான், பிருந்தா, பிரபாகரன் 3 பேரும் போய் அங்கு இருந்தோம். எங்கையாவது போய் பிழைத்துகொள்கிறோம் என்று பிரசாந்ததும் சந்தியாவும் திருப்பூருக்கு போவதாக சொல்லி சென்றார்கள். நாங்களும் வேறு ஒரு பஸ்ஸில் திருப்பூரில் உள்ள என் தம்பி மோகன்

வீட்டிற்கு சென்றோம். நான் அங்கிருந்தபோது என் நாத்தனார் மகன் பாலாஜி போன் செய்து பிரசாந்த் இறந்துவிட்டான் என்று சொன்னார். அது 12ம் தேதி. அதன்பிறகு நாங்கள் மெடிக்கலுக்கு போய் பார்த்தோம். அங்கு இறந்துபோனவர் என் மகன்பிரசாந்த் ஆக இருந்தார். போலிசார் மெடிக்கலில் இருந்தார்கள் அவர்கள் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரிகளில் முருகராஜைத் தெரியும். ஆஜர் 2வது எதிரியை அடையாளம் தெரியும் ஆனால் அவர் பெயர் தெரியாது.

**<u>1 முதல் 6, 8 முதல் 11 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

போலிசார் என்னை மருத்துவமனையிலேயே விசாரித்தார்கள். எனக்கு அந்த தேதி ஞாபகமில்லை. 8ம் தேதி என்ன கிழமை என்று தெரியாது. 10ம் தேதியும் என்ன கிழமை என்று தெரியாது. எனக்கு எழுதப்படிக்க தெரியாது. எத்தனை ஆண்டுகளாக என் மகன் காதலித்தார் என்றால் 2 மாதங்களாகத்தான் எனக்கு தெரியும். அப்போது சந்தியா 17 வயது இளவர் என்றால் சரிதான். முருகராஜ் கூலி வேலை பார்த்து சம்பாதித்து பிள்ளைகளை படிக்கவைத்தார் என்பது தெரியுமா என்றால் தெரியும். நான் திருப்பூர் சென்ற விவரத்தை போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளில் தினேஷ், டிரைவர் பாரதி என்பவர் பெயரும் தெரியும். தற்போதுதான் அவர்களை நீதிமன்றத்தில் பார்க்கிறேன் என்றால் சரிதான். போலிசார் என்னை எதிரிகளை அடையாளம் காட்ட சொல்லி சொல்லவில்லை. முருகராஜுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. முருகராஜ் தன் மகளை காணவில்லை என்று அய்யம்பேட்டை காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றும் அதை வைத்து அவர்தான் செய்திருப்பார் என அனுமானத்தில் நான் சொல்கிறேன் என்றால் தவறு. முருகராஜ் என்னை மிரட்டவில்லைஎன்றால் எங்கள் ஊருக்கு வந்து எங்கள் வீட்டை எல்லாம் இடித்து நிரவிவிடுவேன் என்றால் அந்த விவரத்தை போலிசார் விசாரித்தபோது சொல்லியிருக்கிறேன். தினேஷ்க்கும் பாரதிக்கும் வழக்கிற்கு சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. என் மகன் இளவர் பெண்களுடன் தொடர்பு கொண்டு அங்கங்கே அழைத்து செல்வார் என்றும் அதனால் யாரோ செய்ததற்கு எதிரிகள் மீது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>7 வது எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

பாரதி என்பவரை எனக்கு தெரியாது, அவர் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கிறார் என்று எனக்கு தெரியாது. பாரதி டிரைவர் என்று

போலிசார் சொன்னார்கள். பாரதி எந்த ஊர்க்காரர், என்ன ஜாதிக்காரர் என்பது எனக்கு தெரியாது. அவருக்கும் இந்த வழக்கிற்கும் என்ன தொடர்பு என்று எனக்கு தெரியாது. போலிசார் சொன்னதன் அடிப்படையில் பாரதி டிரைவர் என்பது மட்டும்தான் எனக்கு தெரியும். நான் பறையர் ஜாதி. எதிரிகள் பள்ளர் ஜாதி. என்னுடைய மகன் பறையர் ஜாதியைச்சேர்ந்தவர். பாரதி என்பவர் எங்கள் ஊருக்கோ, எங்கள் ஜாதிக்கோ எதிரிகள் ஜாதிக்கோ தொடர்பற்ற நபர்என்றால் சரிதான். அவர் மூப்பனார் ஜாதி என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அவர் திருவையாறு அருகில் மடம் கிராமத்தில் சேர்ந்தவர் என்றால் சரிதான். பாரதி என்ற பெயரும் அவரைபற்றிய விவரங்களும் நடுக்காவேரி போலிசார் சொல்லிதான் தெரியும். எங்கள் ஊரில் சிவபிரகாசத்தின் மகன் ரமேஷ் என டிரைவர் இருக்கிறாரா என்று எனக்கு தெரியாது. சிவபிரகாசத்தின் மகன் ரமேஷ் சொல்லிதான் பாரதி வண்டியை எடுத்துகொண்டு சென்றார் என்ற விவரமும் எனக்கு தெரியாது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-A. மலர்விழி)

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

| | | |
|---|---|---|
| THE COURT OF | : | II ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THANJAVUR. |
| Case No | : | SC 73/2020 |
| Prosecution Witness | : | PW 9 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பிரபாகரன் | Caste | : | |
| Father's Name | : | வீரமணி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 30 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 20.06.2023.**

***<u>எதிரிகள் 1, 2, 4 , 9 , 10 , 11 வருகை . எதிரிகள் 3, 5, 6, 7, 8 வருகை இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.</u>***

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u> :-**

நான் மணலூர் சாஸ்திரிநகரில் குடியிருக்கிறேன். நான் சென்டிரிங் வேலை பார்க்கிறேன். அசா8 என்னுடைய அம்மா. இறந்துபோன பிரசாந்த் என்னுடைய தம்பி. 08.06.2019ம் தேதியன்று விடியற்காலை 4.30 மணியளவில் சந்தியாவும் பிரசாந்தும் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். அந்த பெண்ணிற்கு 17 வயது இருந்தது. நாங்கள் உன் அப்பா அம்மாவிற்கு தெரிந்தால் சண்டை வரும் போய்விடு என்று சொன்னோம். அதற்கு அந்த பெண் வீட்டிற்கு போனால் என் அப்பா, என் மாமா, சித்தப்பா ஆகியோர் கொன்றுவிடுவார்கள் என்று சொன்னார். சந்தியாவின் அப்பா பெயர் முருகராஜ், மாமா பெயர் வெங்கடேஷ் சித்தப்பா பெயர் தினேஷ். ஒரு 9.00 மணி இருக்கும்அந்த பெண்ணை விட்டுவிட்டு வருவதாக சொல்லி என் தம்பி போனான். அதன்பிறகு அவன் வரவில்லை. 10ம் தேதியன்று அவர்கள் காங்கேயம் பேட்டையில் உள்ள என் பெரியம்மா வீட்டில் இருப்பதாக தகவல் கிடைத்தது. நாங்கள் 11.00 மணிக்கு காங்கேயம் பேட்டைக்கு போனோம் அங்கு முன்பே பிரசாந்த சந்தியாவிற்கு தாலி கட்டிவிட்டார். முருகராஜ், தினேஷ், வெங்கடேஷ், பன்னீர்செல்வம், பாரதி, இனியவன் ஆகியோர் என் பெரியம்மா வீட்டு தெருவிற்குள் வரும்போதே என் பெரியம்மா மேற்சொன்னவர்கள் ஊருக்கு வந்திருக்கிறார்கள் என்றும் அதனால் கரும்புகொல்லையில் ஒளிந்துகொள்ளுங்கள் என்றும் சொன்னார். நாங்கள் கரும்பங்கொல்லையில் ஒளிந்துகொண்டோம் மாலை

6.00 மணியளவில் பெரியம்மா வீட்டிற்கு நாங்கள் சென்றோம் அப்போது பிரசாந்த்தும் சந்தியாவும் அங்கு இல்லை. பிரசாந்த் பெண்ணை அழைத்துக்கொண்டு திருப்பூர் போவதாக என்னிடம் சொல்லியிருந்ததால் திருப்பூர் மங்களலபுரம் சோமனூாரில் உள்ள என் மாமா மோகன்ராஜ் வீட்டிற்கு சென்றோம். 12 ம் தேதி காலை எங்களுக்கு போன் வந்தது. என் அத்தை மகன் பாலாஜி என் தம்பி இறந்துவிட்டதாக தெரிவித்தார். அதன்பிறகு நாங்கள் கிளம்பி திருவையாறு போலிஸ் ஸ்டேசன் வந்தோம். கபிஸ்தலம் போலிசார் என்னை எங்கள் வீட்டில் வைத்து விசாரித்தார்கள் அப்போது போலிசார் வெட்டாறில் என் தம்பி இறந்துகிடந்ததாக எங்களிடம் சொன்னார்கள். 13 ம் தேதி நாங்கள் மெடிக்கலுக்கு சென்று தம்பி பிரேதத்தை பார்த்தோம். திருவையாறு போலிசார் என்னை விசாரித்தார்கள் நான் மேற்சொன்ன தகவலை சொன்னோம். மெடிக்கலில் என் தம்பியின் பிரேதத்தை பிரேதகூறு ஆய்வு செய்து பிரேதத்தை ஒப்படைத்தனர். ஆஜர் எதிரிகளை தெரியும்.

<u>1 முதல் 6, 8 முதல் 11 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

என்னை திருவையாறு போலிசார் மற்றும் கபிஸ்தலம், நடுக்காவேரி போலிசார் விசாரித்தார்கள். கபிஸ்தலம் காவல் ஆய்வாளர் என்னை எங்கள் வீட்டிற்கு அழைத்து சென்றார். என்னுடைய வீட்டில்வைத்துதான் கபிஸ்தலம் ஆய்வாளர் என் தம்பியின் போட்டோவை காட்டி என்னை விசாரித்தார். எதிரிகளை ஏற்கனவே தெரியும். இந்த வழக்கிற்கு பின்னர் இன்று நீதிமன்றத்தில்தான் பார்க்கின்றேன். போலிசார் திருவையாறு காவல்நிலையத்தில் எதிரிகளை வைத்து என்னிடம் அடையாளம் கேட்டார்கள். என் பெரியம்மா எங்களை ஒளிந்துகொண்டு சொன்னதை போலிசார் விசாரிக்கும்போது சொல்லியிருக்கிறேன். நான் என் தம்பியை மருத்துவமனையில்தான் பார்த்தேன். அதற்கு முன்பு அவரை 10 ம் தேதி பார்த்தேன். போலிசார் என்னை 13 ம் தேதி விசாரித்தார்கள். காலை 5.00 மணிக்கு நான் திருவையாறு காவல்நிலையம் சென்றேன். 7.00 மணியளவில் கபிஸ்தலம் ஆய்வாளர் என்னை விசாரித்தார். அதன்பின்னர் நடுக்காவேரி போலிசார் என்னை விசாரித்தார்கள். நடுக்காவேரி போலிசார்தான் என்னை மருத்துவமனைக்கு வரச்சொன்னார்கள். என் தம்பியின் இறப்பிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. முருகராஜ் தன் மகள் காணாமல் போனதாக புகார் கொடுத்ததை வைத்து எங்கேயோ என் தம்பி இறந்துபோனதற்கு அனுமானத்தின்பேரில்

எதிரிகளின் மீது புகார் கொடுத்துவிட்டோம் என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதால் பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. கரும்பங்கொல்லைக்குள் ஏன் ஒளிந்தோம் என்றால் எதிரிகள்தான் என் அம்மாவையும் என் தம்பியையும் பிடித்து வெட்டுவோம் என்று மிரட்டி கொண்டிருந்தார்கள். இந்த விவரத்தை போலிசார் விசாரிக்கும்போது சொல்லியிருக்கிறேன். எதிரிகள் மிரட்டியதற்காக கபிஸ்தலம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறேன். அந்தபுகாரின்பேரில் போலிசார் நடவடிக்கை எடுத்தார்களா என்று எனக்கு தெரியாது. முருகராஜிற்கு இரண்டு மகள்கள் அவர் தன் மகள்களை படிக்க வைத்திருக்கிறார். முருகராஜின் மகள்கள் எங்கிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. நான் என் அம்மாவின் சாட்சியை அனுசரித்து எதிரிகள் மீது குற்றம் சுமத்தி போலிசார் கேட்டுக்கொண்டதால் பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

<u>7 வது எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை</u>

யார்யார் வந்திருப்பதாக சொல்லி என் பெரியம்மா ஒளிந்துகொள்ள சொன்னார் என்றால் முருகராஜ், வெங்கடேஷ், பன்னீர்செல்வம், பாரதி, தினேஷ், இனியவன். பாரதியைத்தவிர மற்றவர்கள் எங்கள்ஊர்க்காரர்கள் என்றால் அது எனக்கு தெரியாது. பாரதி வெளியூர்க்காரர். என் பெரியம்மாவிற்கு பாரதியின் பெயர் எப்படி தெரியும் என்றால் என் சித்தப்பா சொல்லியிருக்கலாம். என் சித்தப்பா தான் எங்கள் ஊர் நாட்டாமை. பாரதி இந்நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறாரா என்று எனக்கு தெரியாது. அன்றைக்கும் பாரதி வந்திருந்தாரா என்று எனக்கு தெரியாது. எதிரிகள் எனக்கு பக்கத்து தெருக்காரர்கள். என் சித்தப்பா எங்கள்கூட ஒளிந்திருக்கவில்லை. இதுபோல் சாட்சி சொல்லவேண்டும் என்ற விவரத்தை நடுக்காவேரி போலிசார் என்னிடம் சொல்லவில்லை. என் தம்பி பெண்ணை அழைத்துக்கொண்ட அன்றே கபிஸ்தலம் காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்துவிட்டேன். முருகராஜ் மற்றும் தினேஷ் மீது புகார் கொடுத்தேன் மற்றவர்கள் பெயரில் நான் புகார் கொடுக்கவில்லை அவர்கள் இருவர் மட்டும்தான் வெட்டிப்புடுவேன், குத்திப்புடுவேன் என்று மிரட்டினார்கள். எதிரிகள் பள்ளர் வகுப்பை சேர்ந்தவர்கள். நாங்கள் பறையர் வகுப்பை சேர்ந்தவர்கள். பாரதி எந்த ஊரைச்சேர்ந்வர் எந்த வகுப்பை சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது. எதிரிகள் வகுப்பை சேர்ந்த வடிவேல்

(எ) ரமேஷ் த/பெ சிவபிரகாசம், கார்த்திகேயன் ஆகியோர் திருவையாறு ஸ்டாண்டில் கார் ஓட்டுபவர்கள். அவர்கள் இருவரும் சொல்லிதான் பாரதி கார் எடுத்து சென்றார் என்றும் பாரதிக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-A. மலர்விழி)

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.